**Tamil Translation**



# 2024 தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்துவதற்கான ஆலோசனைகள்

விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது கீழுள்ள படிமுறைகளைப் பின்பற்றவும்.

## விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய பொதுவான நிபந்தனைகள்

- விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் www.nemis.moe.gov.lk எனும் இணைப்பினூடாக மனித வள முகாமைத்துவ தகவல் முறைமையினுள் (nemis) தமது அடையாள அட்டையைப் பயன்படுத்தி பிரவேசித்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- தமது தகவல்கள் உள்ளீடு செய்யப்படவில்லை எனின் அல்லது ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனின், தாம் சேவையாற்றும் பாடசாலை உரித்தாகும் வலயக் கல்வி அலுவலகத்தின் nemis ஒருங்கிணைப்பாளரை சந்தித்து உரிய ஆவணங்களை முன்னிலைப்படுத்தி தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- 2023.12.31 திகதிக்கு தற்போதைய பாடசாலையில் சேவைக் காலம் 10 வருடங்களை விட அதிகமாக இருந்து, வயது 55 வருடங்கள் அல்லது அதை விடக் குறைவு எனின் கட்டாயமாக இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்தை ஆசிரியரே பூரணப்படுத்தி, அதன் அச்சுப் பிரதியை 2024.05.17ம் திகதிக்கு முன்னர் அதிபரிடம் கையளிக்க வேண்டும்.( தானே கொண்டு வந்து அதிபரிடம் By hand கையளிப்பது பொருத்தமானது)
- விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்ததன் பின்னர் (submit) மீண்டும் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என்பதனால், தகவல்களை நன்கு பரிசோதித்ததன் பின்னர் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதை (Submit) சகல ஆசிரியர்களும் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

1. விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் www.nstt.moe.gov.lk இணைப்பினூடாக login as a teacher இல் பிரவேசிக்குக.
2. அதன் பின்னர் திரையின் கீழ் பக்கமாக உள்ள I have read and understood the guidelines above இன் ☐ check box) மீது (√) எனும் குறியீட்டினையிட்டு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை புரிந்துகொண்டமையை உறுதிப்படுத்தவும்.

3. தங்களது தேசிய அடையாள இலக்கத்தை சரியாக உள்ளீடு செய்து proceed இன் மீது click செய்து, உரிய விண்ணப்பப் படிவத்திற்கு செல்லவும். (தங்களது தற்போதைய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்யவும். முன்னோக்கிச் செல்ல முடியவில்லை எனின், தங்களது பழைய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்து, மீண்டும் முயற்சிக்கவும்) இதன் போது நிகழ்நிலை இடமாற்ற விண்ணப்பப் படிவம் திறக்கப்படும்.

4. இடமாற்ற விண்ணப்பப் படிவம் காட்சியளிக்கவில்லை எனின், தங்களது தகவல்கள் தேசிய பாடசாலை ஆசிரியர் ஒருவர் என்ற வகையில் nemis முறைமையினுள் உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறிருப்பின் தாங்கள் சேவையாற்றும் பாடசாலை உரித்தாகும் வலயக் கல்வி அலுவலகத்தின் nemis ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை சந்தித்து உரிய ஆவணங்களை முன்னிலைப்படுத்தி தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. அதன் படி நிகழ்நிலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது கீழுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றவும்.

5.1 **விண்ணப்பப் படிவத்தின் இல. 1 முதல் 16 வரை -** Basic Information

5.1.1 தங்களது அடிப்படைத் தகவல்கள் சரியானவையா என்பதை பரிசோதிக்கவும். ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம் எனின் அல்லது ஏதேனும் தகவல்கள் உள்ளீடு செய்யப்படவில்லை எனின், Are you sure that above information is correct என்பதில் **No** என்பதை தெரிவு செய்க. தாங்கள் சேவையாற்றும் பாடசாலை உரித்தாகும் வலயக் கல்வி அலுவலகத்தின் nemis ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை சந்தித்து உரிய ஆவணங்களை முன்னிலைப்படுத்தி தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5.1.2 இல.4,6,8,11,12,13,15, மற்றும் 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவது தவறுகள் காணப்படின் அதனை திருத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

5.1.3 Basic Information இலுள்ள தகவல்களை மீண்டும் பரிசோதித்து, சகல விபரங்களும் முழுமையானவையாகவும் சரியானவையாகவும் இருந்தால் மாத்திரம் காணப்படின் Are you sure that above information is correct என்பதில் **Yes** என்பதை தெரிவு செய்து Next page என்பதனூடாக முன்னோக்கிச் செல்லவும்.

5.2 **விண்ணப்பப் படிவத்தின் இல. 17 முதல் 23 வரை - Additional** Information

5.2.1 இல.17 இல், தங்களது பெயரை முதலெழுத்துக்களுடன் சிங்களம் அல்லது தமிழில் குறிப்பிடவும்.

5.2.2 இல.18 இல், தங்களது நியமன வகையினை குறிப்பிடவும்.

5.2.3 இல. 19 இல், இந்த இடமாற்றத்தின் போது கருத்தில் கொள்ள வேண்டிய முகவரியை சரியாக தெரிவு செய்யவும்.

5.2.4 இல. 20 இல், கடந்த 05 வருடங்களுக்குள் (2020-2024) கற்பித்த நேரசூசிக்கு அமைவாக பூரணப்படுத்தவும். ஒரு வருடத்தில் ஒரு பாடத்தை விட அதிகமான பாடங்களை கற்பித்திருக்கும் பட்சத்தில் அதிக எண்ணிக்கையிலான பாடவேளைகள் கற்பித்த பாடத்தைக் குறிப்பிடவும். Section தொடர்பாக **primary** தெரிவு செய்தால் ஒவ்வெரு வருடத்திற்குமான வகுப்பினை குறிப்பிடவும்.
பாடம் தொடர்பாக **Special Education** தெரிவு செய்தால் **Section** மற்றும் **Medium** மட்டும் தெரிவு செய்க.

5.2.5 தாங்கள் ஏதேனும் ஒரு பாடத்திற்காக கல்வியியல் கல்லூரி அல்லது வேறு ஏதேனும் வாண்மைத்துவப் பயிற்சியைப் பெற்றிருப்பின் மாத்திரம் தொடர் இல. 21 இற்குரிய பகுதியைப் பூரணப்படுத்தவும்.

5.2.6 தாங்கள் பட்டம் ஒன்றை நிறைவு செய்திருப்பின் மாத்திரம் தொடர் இல. 22 இற்குரிய பகுதியை பூரணப்படுத்த வேண்டும்.

5.2.7 தாங்கள் தற்போது தற்காலிகமாக இணைப்பு பெற்று வேறு பாடசாலை அல்லது நிறுவனமொன்றில் சேவையாற்றும் ஒருவராயின், தொடர் இல. 23 இற்கு எதிரே உள்ள பெட்டின் மீது yes. attached என்பதை தெரிவு செய்யவும். அதன் கீழுள்ள உப பிரிவுகளை சரியாக பூரணப்படுத்தவும்.

**5.2.8** **Additional** Information இல் உள்ள தகவல்கள் சரியானவையா என்பதை மீண்டும் பரிசோதித்து சகல விபரங்களும் முழுமையானவையாகவும் சரியானவையாகவும் இருந்தால் மாத்திரம் Next page ஊடாக முன்னோக்கிச் செல்லவும்.

5.3 **விண்ணப்பப் படிவத்தின் இல. 24 முதல் 26 வரை- Transfer Request**

5.3.1 தொடர் இல. 24 இன் கீழ் தாங்கள் இடமாற்றம் பெற எதிர்பார்க்கும் இடமாற்ற வகையை தெரிவு செய்க.

5.3.1.1 தேசிய பாடசாலை ஒன்றிலிருந்து தேசிய பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பவராயின்,

அதற்குரிய பொத்தானை Click செய்ததன் பின்னர் இடமாற்றம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் 05 பாடசாலைகளை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும். ஆகக் குறைந்து 02 தேசிய பாடசாலைகளையேனும் தெரிவு செய்வது கட்டாயமாகும். (பாடசாலையின் பெயரை Search செய்வதனூடாக பாடசாலையை தெரிவு செய்ய முடியும்.) இடமாற்றம் வழங்கும் போது விண்ணப்பித்துள்ள பாடசாலைகளின் விருப்பு வரிசை கருத்தில் கொள்ளப்படும். தெரிவு செய்த பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி சரியானது என்பதை உறுதிப்படுத்தவும்.

உங்களது முகவரியில் இருந்து தெரிவு செய்த பாடசாலையின் தூரத்தினை குறிப்பிடவும்

5.3.1.2 தேசிய பாடசாலை ஒன்றிலிருந்து மாகாணப் பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பவராயின்,

அதற்குரிய பொத்தானை Click செய்ததன் பின்னர் இடமாற்றம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் மாகாணம் மற்றும் குறித்த மாகாணத்திலுள்ள உரிய மாகாணப் பாடசாலைகளை உள்ளீடு செய்யவும். மாகாணம் மற்றும் விண்ணப்பிக்கும் பாடசாலையை தெரிவு செய்வதற்கு 05 சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறும். (பாடசாலையின் பெயரை Search செய்வதன் மூலம் பாடசாலையை தெரிவு செய்ய முடியும்.) ஆகக் குறைந்தது 02 மாகாணப் பாடசாலைகளையேனும் தெரிவு செய்வது கட்டாயமாகும். மாகாண அரச சேவைக்கு விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்படும் பட்சத்தில், தேவையான ஆவணங்களை சமர்ப்பித்ததன் பின்னர் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பப் படிவம் அனுப்பிவைக்கப்படும். இதன் போது வழங்கப்படும் பாடசாலை தொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும்.

5.3.1.3 தேசிய பாடசாலை ஒன்றிலிருந்து தேசிய பாடசாலை ஒன்றிற்கு அல்லது மாகாணப் பாடசாலை ஒன்றிற்கு என இரண்டு வகையான இடமாற்றங்களையும் எதிர்பார்க்கும் ஆசிரியர் ஒருவராயின்,

உரிய பொத்தானை Click செய்ததன் பின்னர் இடமாற்றம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் 05 தேசிய பாடசாலைகள் மற்றும் 05 மாகாணப் பாடசாலைகளை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும். (பாடசாலையின் பெயரை Search செய்வதன் மூலம் பாடசாலையை தெரிவு செய்ய முடியும்.) ஆகக் குறைந்தது 02 தேசிய பாடசாலைகள்

மற்றும் மாகாணப் பாடசாலைகளை தெரிவு செய்வது கட்டாயமாகும். இடமாற்றம் வழங்கப்படும் போது தேசிய பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் விண்ணப்பித்துள்ள பாடசாலைகளின் விருப்பு வரிசை கருத்தில் கொள்ளப்படும். மாகாண அரச சேவைக்கு விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்படும் பட்சத்தில், தேவையான ஆவணங்களை சமர்ப்பித்ததன் பின்னர் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பப் படிவம் அனுப்பிவைக்கப்படும். இதன் போது வழங்கப்படும் பாடசாலை தொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும்.

5.4 தாங்கள் ஒரே பாடசாலையில் 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ளமையின் காரணத்தினால் கட்டாய இடமாற்றத்திற்கு உட்படக்கூடிய ஒரு ஆசிரியர் எனின், தொடர் இல. 25 இல் இடமாற்றக் கோரிக்கை தானியங்கி முறையில் பூரணப்படுத்தப்படும்.

5.5 தாங்கள் வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர் ஒருவர் எனின் தொடர் இலக்கம் 25 இல் தாங்கள் இடமாற்றம் கோருவதற்கான காரணத்தை சரியாக தெரிவிக்கவும். மருத்துவ காரணம் தெரிவு செய்தால் விண்ணப்பப்படிவத்துடன் TTB/2024/05 படிவத்தினை புரணப்படுத்துதவல் வேண்டும்

5.6 தொடர் இல. 26 இல். விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக ஏதேனும் தகவல்களை குறிப்பிடவேண்டும் எனின் அதனை சுருக்கமாக குறிப்பிடவும்.

5.7 தாங்கள் உள்ளீடு செய்த தகவல்கள் யாவும் முழுமையானை மற்றும் சரியானவை எனின் [Next page] ஐ அழுத்துவதனூடாக முன்னோக்கிச் செல்லவும். தாங்கள் வழங்கிய தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் குறிப்பிட்டு I hereby declare that the information and particulars given above are true and accurate and there are no disciplinary or/and investigation proceeding or/and audit queries. I further acknowledge that mentioning false or misleading information is an offence subject to a disciplinary penalty. இலுள்ள ☐ இன் மீது Click செய்து விண்ணப்பப் படிவத்தை Submit செய்ய முடியும்.

6. அதன் பின்னர் Your Teacher Transfer Application is pending for principal recommendation எனும் தகவல் காட்சியளித்ததன் பின்னர் அதன் கீழுள்ள Download Application என்பதன் மீது Click செய்து தங்களது விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

7. அந்த விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியை பெற்று கையொப்பத்தையிட்டு அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதியான 2024.05.17ம் திகதிக்கு முன்னர் உரிய ஆசிரியரே அதிபரிடம் கொண்டு வந்து கையளிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியுடன் இணைத்து அனுப்பிவைக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு,

i. நியமனக் கடிதத்தின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

ii.இறுதியாக தங்களுக்கு கிடைக்கப்பெற்ற இடமாற்றக் கடிதத்தின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

iii. நேரசூசியின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

iv. நியமனப் பாடமல்லாத பாடம் ஒன்றைக் கற்பிப்பவராயின், அப் பாடத்திற்காக கொண்டுள்ள ஆகக் கூடிய தகைமைக்குரிய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

v. மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியிருப்பின், அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் வைத்தியசாலையில் நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் விசேட வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட TTB/2024/05 படிவம்

8. பொது விடயங்கள் -

- தேவையான போது உங்களது அடையாள அட்டை இலக்கத்தின் முலம் www.nstt.moe.gov.lk பிரவேசித்து விண்ணப்பப் படிவத்தின் தற்போதைய நிலமையினை அறிய முடியும் பூரணப்படுத்தியதன் பின்னர் ஒரு தடவை மாத்திரமே Submit செய்ய முடியும்.
- விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தியதன் பின்னர் ஒரு தடவை மாத்திரமே Submit செய்ய முடியும்.
- விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் தொழில்நுட்பம் சார் பிரச்சனைகள் காணப்படின் 011- 2075854 அல்லது 011-2784434 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு கடமை நேரத்தில் அறியத்தரலாம்.

ஜே. எச். வீரரத்ன
கல்விப் பணிப்பாளர்
ஆசிரியர் இடமாற்றப்பிரிவு
கல்விச் செயலாளருக்காக